







தரம் 10, 11 மாணவர்களுக்கான,

# பாரதியார் – சுயசரிதை

(பிள்ளைக்காதல்)







# தமிழ் மொழியும் இலக்கியமும்.

தொகுப்பு..

ஆசிரியர்: திரு. இ. அநூஷன் [National Dip.in.Teach]

(தொடர்புகளுக்கு 077-4323124)



**சி. சுப்பிரமணிய பாரதி - சுப்பையா (எ) சுப்பிரமணியன்**

**பிறப்பு:** திசம்பர் 11, 1882. எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம், இந்தியா

**இறப்பு:** செப்டம்பர் 11, 1921(அகவை 38)

**இருப்பிடம்:** திருவல்லிக்கேணி

**தேசியம்:** இந்தியர்

**பெற்றோர்:** சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மாள்

**வாழ்க்கைத் துணை:** செல்லம்மாள்

**பிள்ளைகள்:** தங்கம்மாள் (பி:1904), சகுந்தலா (பி1908)

**மற்ற பெயர்கள்:** பாரதியார், சுப்பையா, முண்டாசுக் கவிஞன், மகாகவி, சக்தி தாசன்

**பணி:** செய்தியாளர், கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், விடுதலை வீரர், சமூக சீர்திருத்தவாதி

**குறிப்பிடத்தக்க படைப்புகள்:** பாஞ்சாலி சபதம், பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு மற்றும் பல.

**செல்வாக்கு:** பாரதிதாசன்

**அரசியல் இயக்கம்:** இந்திய விடுதலை இயக்கம்

**சமயம்:** இந்து சமயம்

சின்னசுவாமி சுப்பிரமணிய பாரதி (**திசம்பர் 11, 1882 - செப்டம்பர் 11, 1921**) ஒரு **கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், விடுதலை வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி** ஆவார். இவரை **பாரதியார் என்றும் மகாகவி** என்றும் அழைக்கின்றனர். பாரதி, **தமிழ் கவிதையிலும் உரைநடையிலும் சிறப்பான புலமை கொண்டு, நவீன தமிழ் கவிதைக்கு முன்னோடியாகத்** திகழ்ந்தார். **தமிழ், தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதி மறுப்பு, பல்வேறு சமயங்கள்** குறித்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். தம் எழுத்துகள் மூலமாக மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். **எட்டப்ப நாயக்கர் மன்னர்** இவருடைய கவித்திறனை மெச்சி **பாரதி** என்ற பட்டம் வழங்கினார். அன்று முதல் இவர் **"சுப்பிரமணிய பாரதியார்"** என அழைக்கப்பெற்றார். **பாரதியாரின் நூல்கள் தமிழ்நாடு மாநில அரசினால் 1949 ஆம் ஆண்டில் நாட்டுடைமை** ஆக்கப்பட்டன. **இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமையாக்கப்பட்ட இலக்கியம்** பாரதியாருடையதாகும்

பாரதி, இந்திய வரலாற்றின் திருப்பங்கள் நிறைந்த காலகட்டத்தில் வாழ்ந்தவர். **பால கங்காதர திலகர், உ. வே. சாமிநாதையர், வ. உ. சிதம்பரம் பிள்ளை, மகான் அரவிந்தர்** முதலியோர் இவரின் சமகாலத்தைய மனிதர்கள் ஆவர். இவர் **விவேகானந்தரின் மாணவியான சகோதரி நிவேதிதையை தமது குருவாக** கருதினார்.




**சின்னசாமி ஐயர் இலக்குமி அம்மாள்** தம்பதியினருக்கு **திசம்பர் 11, 1882ல்** தமிழ்நாட்டின் **தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள (அன்றைய திருநெல்வேலி மாவட்டம்) எட்டயபுரத்தில்** பாரதியார் பிறந்தார். இவரின் இயற்பெயர் **சுப்பிரமணியன்** என்றாலும், **சுப்பையா** என்று அழைக்கப்பட்டார். **1887ஆம் ஆண்டு இலக்குமி அம்மாள் மறைந்தார்**. அதனால், **பாரதியார் அவரது பாட்டியான பாகீரதி அம்மாளிடம்** வளர்ந்தார்.

**ஏழு வயதில் பள்ளியில் படித்துவரும்பொழுது கவிதைகள் எழுதத் தொடங்கினார்.** தனது **பதினொன்றாம் வயதில் பள்ளியில் படித்து**

**வரும்பொழுதே கவி புனையும் ஆற்றலை** வெளிப்படுத்தினார். **பள்ளியில் படித்துகொண்டிருக்கும் பொழுதே 1897 ஆம் ஆண்டு செல்லம்மா என்பவரைத் திருமணம்** செய்து கொண்டார். தனது தந்தையின் இறப்புக்குப் பிறகு, **1898 ஆம் ஆண்டு தொழிலில் ஏற்பட்ட நட்டத்தினால் வறுமை நிலை**யினை அடைந்தார். இதனை எட்டயபுரம் மன்னருக்குத் தெரிவித்து பொருளுதவி வழங்குமாறு கடிதத்தில் கேட்டுக்கொண்டார். பின்னர் **எட்டையபுரம் அரண்மனையில் பணி** கிடைத்தது. சில காலத்திலேயே, அப்**பணியை விடுத்து காசிக்கு**ச் சென்றார். 1898 முதல் 1902 வரை அங்கு தங்கி இருந்தார். பின்னர் எட்டயபுரத்தின் மன்னரால் அழைத்து வரப்பட்டு அரண்மனை ஒன்றினில் பாரதி வாழ்ந்தார். **ஏழு ஆண்டுகள் பாட்டெழுதாமல் இருந்தபின்னர், 1904 ஆம் ஆண்டு மதுரையில் பாரதி எழுதிய பாடல் "விவேகபானு" இதழில்** வெளியானது. வாழ்நாள் முழுதும் பல்வேறு காலகட்டங்களில் **இதழாசிரியராகவும் மதுரையில் சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும்** பணியாற்றினார். **தமிழ், ஆங்கிலம், இந்தி, சமற்கிருதம், வங்காள மொழி** ஆகியவற்றில் புலமை பெற்றவர். பிற மொழி இலக்கியங்களை மொழி பெயர்க்கவும் செய்துள்ளார்.

**"கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன்,**
**வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி"** - பாரதி.

**"நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல்,**
**இமைப்பொழுதும் சோராதிருத்தல்"** - பாரதி

தம் **தாய்மொழியாம் தமிழின்மீது அளவுகடந்த அன்பு** கொண்டவர். **பன்மொழிப் புலமை** பெற்ற **பாவலரான** இவர் **"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்"** என கவிபுனைந்த கவிஞாயிறு. **பழந்தமிழ்க் காவியங்களின் மீது தனி ஈடுபாடு** கொண்டவர். அழகியல் உணர்வும் தத்துவ சிந்தனைகளும் ஒருங்கே கொண்டவர் என்று அறியப்படுகின்றார். தேசிய கவி என்ற முறையிலும் உலகு தழுவிய சிந்தனைகளை அழகியலுடனும் உண்மையுடனும் கவின்றதினாலும், இவர் உலகின் சிறந்த கவிஞர்களுடன் ஒப்பிடப்படும் சிறப்பு பெற்றவர் என்றும் அண்மைக்கால தமிழின் தன்னிகரற்ற கவியேறு என்றும் பலர் கருதுகின்றனர்.

**" தேடிச் சோறுநிதந் தின்று**
**பல சின்னஞ் சிறுகதைகள் பேசி**
**மனம் வாடித் துன்பமிக உழன்று**
**பிறர் வாடப் பல செயல்கள் செய்து**
**நரை கூடிப் கிழப்பருவம் எய்தி**
**கொடுங் கூற்றுக் கிரையெனப்பின் மாயும்**
**பல வேடிக்கை மனிதரைப் போலே**
**நான் வீழ்வே னென்று நினைத்தாயோ? "**



**இந்திய விடுதலைப் போராட்டத்தையே பாரதப் போராகவும், பாஞ்சாலியை பாரத தேவியாகவும்** உருவகப்படுத்தி மகாகவி படைத்த படைப்புதான் **பாஞ்சாலி சபதம்.** அழகிய இலக்கிய நயத்தையும் மிக அழகான கவிநயத்தையும் கொண்ட தமிழின் அழியாக் காவியமாக பாரதியின் பாஞ்சாலி சபதம் விளங்குகிறது.

சுப்ரமணிய பாரதியார் ஒரு தமிழ் கவிஞர். **இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் கனல் தெறிக்கும் விடுதலைப்போர் கவிதைகள் வாயிலாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை** ஊட்டியவர். இவர் ஒரு கவிஞர் மட்டுமல்லாமல் ஒரு எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் தன்னுடைய பாட்டுகளின் மூலமாக சிந்தனைகளை மக்களிடம் தட்டியெழுப்பியவர். விடுதலைப் போராட்ட காலத்தில், இவருடைய தேசிய உணர்வுள்ள பல்வேறு

கவிதைகள் மக்களை ஒருங்கிணைத்த காரணத்தினால் **"தேசிய கவியாக"** போற்றப்பட்ட மாபெரும் புரட்சி வீரனின்.

**'மீசை கவிஞன்'** என்றும் **'முண்டாசு கவிஞன்'** என்றும் தமிழ் இலக்கிய உலகம் போற்றும் பாரதியார், தாய் மொழியாம் தமிழ் மொழியின் மீது மிகுந்த பற்றுடையவராக திகழ்ந்தார். **1912 ஆம் ஆண்டு கீதையை தமிழில்** மொழிப்பெயர்த்தார். **'கண்ணன்பாட்டு', 'குயில்பாட்டு', 'பாஞ்சாலி சபதம்', 'புதிய ஆத்திச்சூடி'** போன்ற புகழ் பெற்ற காவியங்கள் பாரதியரால் எழுதப் பெற்றன.

சுதந்திரப் போரில், **பாரதியின் பாடல்கள் உணர்ச்சி வெள்ளமாய், காட்டுத்தீயாய், சுதந்திரக் கனலாய் தமிழ்நாட்டை வீருகொள்ளச்** செய்தது. பாரதியார் "இந்திய பத்திரிக்கையின்" மூலம் மக்களிடையே விடுதலை உணர்வை தூண்டும் வகையில் பல எழுச்சியூட்டும் கட்டுரைகளை எழுதினார். பாரதியின் எழுச்சிக்கு, தமிழ்நாட்டில் பலத்த ஆதரவு பெருகுவதைக் கண்ட **பிரிட்டிஷ் ஆட்சி "இந்தியா பத்திரிக்கைக்கு" தடை விதித்து அவரை கைது செய்து சிறை**யிலும் அடைத்தது.

இவர் **சுதேசிமித்திரனில் உதவி ஆசிரியராக, நவம்பர் 1904 முதல் ஆகஸ்ட் 1906** வரை பணியாற்றினார். **"ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்"** என்று சுதந்திரம் அடைவதற்கு முன்பே தன்னுடைய சுதந்திர தாகத்தை தன் பாட்டின் மூலம் வெளிபடுத்தியவர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

**1921 ஆம் ஆண்டு ஜுலை மாதம் திருவல்லிகேணியில் உள்ள பார்த்தசாரதி கோவிலுக்கு** சென்றபோது, எதிர்பாராவிதமாக அந்த **கோவில் யானையால் தூக்கி எறியப்பட்டதால் பலத்த காயமுற்று மிகவும் நோய்வாய்ப்பட்டார்.** பிறகு, **1921 செப்டம்பர் 11ம் தேதி, தனது 39 ஆவது வயதில் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை**ப் பெற்றார்.

**எட்டயபுரத்திலும், சென்னையில் உள்ள திருவல்லிக்கேணியிலும் பாரதியார் வாழ்ந்த இடத்தை பாரதியாரின் நினைவு இல்லமாக தமிழ்நாடு அரசு** மாற்றி இன்று வரை பொதுமக்களின் பார்வைக்காக பராமரித்து வருகிறது. இவர் **பிறந்த எட்டயபுரத்தில், பாரதியின் நினைவாக மணிமண்டபமும் அமைக்கப்பட்டு இவருடைய திருவுருவச் சிலையும் வைக்க**ப்பட்டுள்ளது. பாரதியின் வாழ்க்கை வரலாறு தொடர்பான **புகைப்படக் கண்காட்சியும், இவருடைய திருவுருவச் சிலையும்,** இவரின் நினைவை போற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.


பாரதியை மக்கள், **'கவி', 'மானுடம் பாடவந்த மாகவி', 'புது நெறி காட்டிய புலவன்', எண்ணத்தாலும் எழுத்தாலும் இந்திய சிந்தனைக்கு வளம் சேர்த்தவர்', 'பல்துறை அறிஞர்', 'புதிய தமிழகத்தை உருவாக்க கனவு கண்ட கவிக்குயில்', 'தமிழின் கவிதை' மற்றும் உரைநடையில் தன்னிகரற்ற புலமை பெற்ற பேரறிவாளர்,** என்றெல்லாம் புகழ்கின்றனர். உலகதமிழர் நாவில் மக்கள்கவி பாரதியாரின் பெயர் அடிக்கடி உச்சரிக்கபடுகிறது என்றால் அது மிகையாகாது.



பாரதியாரின் **சுயசரிதை, மற்றும் அவரது முதற் காதல்** பற்றி..

மகாகவி பாரதியார் **"சுயசரிதை"** என்னுமொரு கவிதை எழுதியிருக்கின்றார். பாரதியாரின் ஆளுமையை அறிந்து கொள்வதற்கு உதவும் கவிதைகளிலொன்று அவரது இந்தக்கவிதை. இதுவொரு நீண்ட கவிதை. கவிதையின் ஆரம்பம் **"பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே."** என்ற **பட்டினத்துப்பிள்ளையாரின் கவிதை வரிகளுடன் ஆரம்ப**மாகின்றது. பாரதியார் தன்னைச் **சித்தர்களிலொருவராகக்கருதுபவர்.** சித்தர்களிலொருவரான பட்டினத்தாரின் இருப்பு பற்றிய

கவிதை வரிகளுடன் ஆரம்பமாகியிருப்பது இதனை நன்கு புலப்படுத்துகின்றது. அது பாரதியாரின் இருப்பு பற்றிய சிந்தனையினைத்தான். ‘‘பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே’’ என்னும் கூற்றுக்கேற்ப அவரது **வாழ்வில் கடந்து போன இழப்புகளைப்பற்றிச் சுயசரிதை** விபரிக்கின்றது. **நிறைவேறாத பிள்ளைக்காதல் அதாவது மானுடரின் முதற் காதல், அவரது ஆங்கிலக்கல்வி கற்றல், அவரது திருமணம் மற்றும் அவரது தந்தை வியாபாரத்தில் நொடிந்துபோய் வறுமையுறல் போன்ற விடயங்களைக்** கவிதை விபரிக்கின்றது. ஆனால் **இந்த வாழ்வே இவ்விதமானதொரு கனவுதான்** என்பதை அவர் நன்கு புரிந்திருக்கின்றார். ஆனால் அதற்காக அவர் வாழ்விலிருந்து ஓடி, ஒதுங்கிப்போய் விட்டவரா?



இவ்விதமாக இழந்தவை பற்றியெல்லாம் விபரிக்கும் அவர், ஆரம்பத்தில் **‘‘உலகெ லாமொர் பெருங்கன வ.்.துளே உண்டு றங்கி யிடர்செய்து செத்திடும் கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர் கனவி லுங்கன வாகும்’’** என்று கூறும் அவர், **மானுட வாழ்வே ஒரு கனவு** என்பார். ஆனால் அதற்காக, அதனை நினைத்து, நினைத்து வருந்துவதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. **‘‘இதற்குநான் பலநி னைந்து வருந்தியிங் கென்பயன்? பண்டு போனதை எண்ணி யென்னாவது? சிலதி னங்கள் இருந்து மறைவதில் சிந்தை செய்தெவன் செத்திடு வானடா’’** என்று கூறித் தன் சுயசரிதையினை முடிப்பார்.

பாரதியாரின் பால்ய காலத்தில் **அவரையொத்த சிறுவர்கள் எல்லாரும் ஆடியும், பாடியும், ஓடியும் விளையாடிக்கொண்டிருக்கையில், பாரதியாரால் மட்டும் தந்தையின் கண்டிப்பு அஞ்சி அவ்விதம் அச்சிறார்களைப்போல், அவர்களோடு ஆடிப்பாடிட முடியவில்லை**. அதனால் **தனிமையில், தோழ்மையின்று அவர் வருந்தினார்**. அதனைத் தனது சுயசரிதையில் கூறுவார்.

பாரதியார் தன் சுயசரிதைக் கவிதையில் விரிவாகவே தன் பிள்ளைக்காதல் அனுபவங்களை விபரித்திருக்கின்றார். **பாரதியாருக்குக் காதல் பற்றி, பெண்கள் பற்றி உயர்ந்த எண்ணமுண்டு,** இதனால்தான் காதலின் சிறப்பைப்பற்றி, பெண்களின் உயர்வைபற்றியெல்லாம் அவரால் சிந்திக்க முடிந்தது. அவற்றை மையமாக வைத்துக் கவிதைகள் பலவற்றை எழுத முடிந்தது. ஆனால் அவரை அந்த **முதற் காதல் மிகவும் அதிகமாகவே பாதித்திருப்பதை அது பற்றி விரிவாகவே அவர் எழுதுயிருந்த கவிதை வரிகள் மூலம் அறிய** முடிகின்றது. **நீரெடுப்பதற்காக, நித்திலப்புன்னகை வீசி அவள் வரும் அழகினை, அவளுக்காகக் காத்திருந்து அவளழகைக் கண்டு அவளழகில் களித்திடும் மனப்போக்கினை** எல்லாம் அவர் விரிவாகவே விபரித்திருக்கின்றார்

ஆனால் அவரது **முதற்காதலான இந்தப் பிள்ளைக்காதல் தோல்வியிலேயே** முடிந்தது. **பத்து வயதில் அவர் நெஞ்சை ஒருத்தி ஆட்கொண்டாள். ஆனால் அவரது தந்தையோ பன்னிரண்டு வயதில் தான் பார்த்த பெண்ணொருத்தியை அவருக்கு மணம்** செய்து வைத்தார். அதனைப் பாரதியார் மேற்படி ‘‘சுயசரிதை’’ கவிதையில் பின்வருமாறு விபரிப்பார்:

**‘‘ஆங்கோர் கன்னியைப் பத்துப் பிராயத்தில்**
**ஆழ நெஞ்சிடை யூன்றி வணங்கினன்**
**ஈங்கோர் கன்னியைப் பன்னிரண் டாண்டனுள்**
**எந்தை வந்து மணம்புரி வித்தனன்.’’** இவ்விதமாகத் தான் **காதலித்த பெண்ணை இழந்து, இன்னுமொருத்தியை மணம் செய்தபோதும், ஏற்கனவே தான் இன்னுமொரு பெண்ணிடம்**

**கொண்டிருந்த காதல்தான் நிற்க வேண்டுமெனத்தான் தான் ஒருபோது தன் உள்ளத்திலெ எண்ணியவனல்லன்** என்றும் கவிஞர் கூறுகின்றார்.

இவ்விதம் **ஒருத்தியை நினைத்திருக்கையில், இன்னொருத்தியை மணப்பது தவறென்றாலும், அதனை எடுத்துத் தந்தையிட கூறும் திறனிலலாயினேன்** என்று கூறும் பாரதி, **சுவாலைவிட்டு எரியும் காதல் தழலானது எவ்வளவு தூரம் தன் உள்ளத்தை எரித்துள்ளதென்பதையும் தான் கண்டிலேன்** என்கின்றார். இவ்விதம் இந்தச் **“சுயசரிதை” கவிதையின் மூலம் பாரதியாரின் தனிப்பட்ட வாழ்க்கை, அது பற்றிய உணர்வுகள் பலவற்றை அறிய** முடிகின்றது. அந்த வகையில் மிகவும் முக்கியத்துவம் மிக்க கவிதையாக மிளிர்கிறது.

இந்தச்சிந்தனை அவருக்கு இருந்ததனால்தான் அவர் **மானுட வாழ்வே ஒரு கனவு என்று வருந்தி, ஒதுங்கி, ஓர் ஓரத்தே ஒடுங்கிக்குடங்கி இருந்து விடாமல், இயன்ற மட்டும் நூல்களை வாசிப்பதில், இருப்பை அறிவதில், இருப்பில் நிறைந்து கிடக்கும் வறுமை, தீண்டாமை, அடிமைத்தனம், வர்க்க வேறுபாடுகள், மத வேறுபாடுகள், பெண் அடிமைத்தனம் எனப் பல்வேறு சீர்கேடுகளையும் சீரமைக்க வேண்டுமென்று சிந்தித்தார்.** அந்த அவரது **பரந்து பட்ட சிந்தனைகளே கவிதைகளாக, கட்டுரைகளாக, வசன கவிதைகளாக, கதைகளாக, மொழிபெயர்ப்புகளாக** என்று பல்வேறு வடிவங்களில் உருப்பெற்றன. அவ்விதம் உருப்பெற்றதால்தான் அவை இன்னும் மானுடர்க்கு அரிய பலவகைகளிலும் பயனுள்ளவையாக விளங்கி வருகின்றன. இன்னும் பல் ஆயிரம் வருடங்களுக்கு அவ்விதமே அவை இருக்கும்.




**பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

01. பாரதியார் எங்கு எப்போது பிறந்தார்?
02. பாரதியாரின் பெற்றோர்கள் யாவர்?
03. பாரதியாரின் இளமைப் பெயர் யாது?. செல்லப் பெயர் யாது?
04. பாரதியின் மனைவியின் பெயர் யாது?, எத்தனை வயதில் திருமணம் முடித்தார்?
05. பாரதியுடன் சம காலத்தில் வாழ்ந்த புலவர்கள் யாவர்?
06. பாரதி என்ற பட்டத்தை வழங்கியவர் யார்?
07. பாரதி எம் மொழிகளில் தேர்ச்சியுடையவராக இருந்தார்?
08. பாடதியின் படைப்புக்கள் எவற்றை கருவாகக் கொண்டு எழுந்தது?
09. பாரதிக்கு பல வழிகளிலும் உதவிய மன்னன் யார்?
10. பாரதி பணியாற்றிய பத்திரிகைகள் எவை?
11. பாரதியாரின் படைப்புக்களுக்கு உதாரணமட தருக.
12. பாரதி எவ்வாறான கோணங்களில் மக்கள் மத்தியில் பார்க்கப்பட்டார்?
13. பாரதியின் இலக்கியங்களுக்கு கிடைத்த அங்கீகாரம் யாது?
14. பாரதி எப்படி?, எப்போது இயற்கையெய்தினார்?

எமது பாடப்பரப்பில் பாரதியாரின் சுயசரிதையிலிருந்து **‘பிள்ளைக் காதல்’** எனும் பகுதியில் **9 - 13** வரையான **05 பாடல்கள்** தரப்பட்டுள்ளது. முதல் **இரண்டு பாடல்களும் காதலுணர்வை** பாட, ஏனைய **மூன்று பாடல்களும் அதிலிருந்து பெறத்தக்க படிப்பினைகளை** கூறி நிற்பதைக் காணலாம்.

**“பாடல் 01”**

நீரெ டுத்து வருதற் கவள்மணி

……………………………………………………………………………………………………

**நித்தி லப்புன் நகை**சுடர் வீசிடப்

……………………………………………………………………………………………………

போரெ டுத்து வருமதன் முன்செலப்

……………………………………………………………………………………………………

போகும் வேளை யதற்குக் தினந்தொறும்

……………………………………………………………………………………………………

வேரெ டுத்துச் **சுதந்திர நற்பயிர்**

……………………………………………………………………………………………………

வீழ்ந்தி டச்செய்தல் வேண்டிய மன்னர்தம்

……………………………………………………………………………………………………

சீரெ டுத்த புலையுயிர்ச் சாரர்கள்

……………………………………………………………………………………………………

**தேச பத்ர் வரனைக் காத்தல்போல்**

……………………………………………………………………………………………………

**“பாடல் 02”**

காத்தி ருந்தவள் போம்வழி முற்றிலும்

……………………………………………………………………………………………………

கண்கள் பின்னழ கார்ந்து களித்திட

……………………………………………………………………………………………………

**யாத்த தேருரு ளைப்படு மேழைதான்**

**யாண்டு தேர்செலு மாங்கிழு புற்றெனக்**

கோத்த சிந்தையோ டேகி யதில்மகிழ்

கொண்டு நாட்கள் பலகழீத் திட்டனன்

**பூத்த ஜோதி வதனம்** திரும்புமேல்

புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன்

**"பாடல் 03"**

புலங்க ளோடு கரணமும் ஆவியும்

போந்து நின்ற விருப்புடன் மானிடன்

நலங்க ளேது விரும்புவன் அங்கவை

நண்ணு றப்பெறல் திண்ணம தாமென

இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்

யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துளேன்

விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்

…………………………………………………………………………………………………

விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே

…………………………………………………………………………………………………

**“பாடல் 04”**

சூழு மாய வுலகினிற் காணுறுந்

…………………………………………………………………………………………………

தோற்றம் யாவையும் மானத மாகுமால்

…………………………………………………………………………………………………

ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்

…………………………………………………………………………………………………

அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்

…………………………………………………………………………………………………

தாழு முள்ளத்தர், சோர்வினர், **ஆடுபோல்**

…………………………………………………………………………………………………

**தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்**

…………………………………………………………………………………………………

வீழு மோரிடை யூற்றினக் கஞ்சுவோர்

அன்பென்று கொட்டு முரசே!

…………………………………………………………………………………………………

விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

…………………………………………………………………………………………………

**“பாடல் 05”**

விதியை நோவர்,தம் நண்பரைத் தூற்றுவர்

…………………………………………………………………………………………………

வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்

…………………………………………………………………………………………………………

சதிகள் செய்வர், பொய்ச் சாத்திரம் பேசுவர்

…………………………………………………………………………………………………………

சாத கங்கள் புரட்டுவர் பொய்மைசேர்

…………………………………………………………………………………………………………

மதியி னிற்புலை நாத்திகங் கூறுவர்

…………………………………………………………………………………………………………

மாய்ந்தி டாத நிறைந்த விருப்பமே

…………………………………………………………………………………………………………

கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்

…………………………………………………………………………………………………………

**கண்ணி லாதவர் போலத் திகைப்பர்**காண்.

…………………………………………………………………………………………………………

**பாடல் 01இல் வினாப்படக்கூடிய மாதிரி வினாக்கள்.**

01. எத்தனை வயது சிறுமி மீது பாரதி காதல் வயப்படுகிறார்?
02. நீரெடுத்துச் செல்ல வரும் சிறுமியை எவ்வாறு வர்ணிக்கிறார் பாரதி?
03. சிறுமியிடத்து பாரதி காதல் மயக்கங்கொள்ள காரணமாக அமைவது எது?
04. காதல் உணர்வைத் தூண்டுத் தேவர் யார்?
05. சிறுமியைக் காண பாரதி எவ்வாறு காத்திருக்கிறார்?
06. இக் கவிதையில் கூறப்படும் மன்னனின் இயல்புகள் யாது?
07. இக் கவிதையில் கூறப்படும் படைவீரர்களின் இயல்புகள் யாது?
08. படைவீரர்கள் மறைவாக காத்திருக்க காரணம் யாது?
09. தேசபக்தர்கள் எதற்காகப் போராடுகின்றனர்?
10. இக் கவிதைப் பகுதியில் இடம்பெறும் அணிகளை குறிப்பிட்டு விளக்குக.

**பாடல் 02இல் வினாப்படக்கூடிய மாதிரி வினாக்கள்.**

01. சிறுமியின் எவ் அழகினை பாரதி ஆராய்ந்து இன்பமடைகிறார்?

02. சிறுமியின் அழகில் மயங்கிய பாரதிக்கு நடந்தது யாது?

03. சிறுமியின் அழகில் மயங்கி, அவள் பின் தான் எவ்வாறு சென்றதாக பாரதி கூறுகிறார்?

04. சிறுமியின் முக அழகு எத்தகையது?

05. சிறுமியின் பார்வை தன்னில் பட்டால் தனக்கு எவ்வாறான நிலை ஏற்படும் என கூறுகிறார்?

06. ஐம்புலன்களும் எவை?

07. இக் கவிதைப் பகுதியில் இடம்பெறும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

**பாடல் 03இல் வினாப்படக்கூடிய மாதிரி வினாக்கள்.**

01. எவ்வாறான இயல்புள்ளவர்கள் வாழ்வில் விரும்பியதை அடைந்துகொள்வர்.

02. வாழ்வில் வெற்றியுடைவது பற்றி சரியாக கணித்தவர்கள் யாவர்?

03. அந்தக் கரணங்கள் எனப்படுபவை எவை?

04. மிருகக்குணம் எனக் கூறப்படுவது எது?

05. மிருகக்குணம் மனிதர்களிடம் இல்லாவிடில் எவ்வாறான பேறு கிடைக்கும்?

**பாடல் 04இல் வினாப்படக்கூடிய மாதிரி வினாக்கள்.**

01. உலகம் எதனால் சூழ்ந்துள்ளது?

02. மனம் எவற்றை விரும்பி மாயும் தன்மையுடையது?

03. நாளைய விளைவு நல்லதாக நிறைவேற யாது செய்தல் வேண்டும்?

04. தாம் விரும்பியவற்றை எதையும் பெறாதவர்கள் / பெறத் தகுதியற்றவர்கள் யாவர்?

05. இக் கவிதைப் பகுதியில் இடம்பெறும் அணியினைக் குறிப்பிட்டு விளக்குக.

**பாடல் 05இல் வினாப்படக்கூடிய மாதிரி வினாக்கள்.**

01. வாழ்வில் விரும்பியவற்றை அடையாது தோற்றவர்களின் இயல்புகளாக கூறப்படுபவை எவை?

02. நன்மைகள் எல்லாவற்றையும் தருவது எது?

03. இக் கவிதைப் பகுதியில் இடம்பெறும் அணியினைக் குறிப்பிட்டு விளக்குக.

04. இக் கவிதைகளில் வெளிப்படும் பாரதியின் மொழிநடைச் சிறப்பம்சங்களைத் விளக்குக.

05. நித்திலம், புலையுயிர், சாரர்கள், ஆர்ந்து, மேழை, போந்து, நண்ணுறல், திண்ணம், இலங்கும், வெகுளி, மதி, மாய்ந்திடாத, கதி என்பவற்றுக்கான பொரளைத் தருக.